சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –25.03.2025

ம.சா.2– சில்லாரி த/பெ – மண்டையன்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர் எனது கொழுந்தியா மகன். மனுதாரின் தகப்பனார் தற்போது என்ன செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை மனுதாரர் வழக்கறிஞரிடன் சொன்னார். எனக்கு வழக்கு விபரங்கள் தெரியும். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமான திருமணம் நிச்சய திருமணம், நான் தான் நடத்தி வைத்தேன். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரரை மனுதாரருக்கு தெரியாது. மனுதாருக்கு ஒரே மகன் அவன் பெயர் தெரியாது. மனுதாருக்கு 15 பவுன் நகையும், பண்ட பாத்திரங்களும் கொடுப்பதாக சொன்னார்கள், ஆனால் கொடுக்கவில்லை, சீர்வரிசை செய்தார்கள். மனுதாரரின் மகனுக்கு உடல்நிலையில் பாதிப்பு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. மனுதாரருக்கு மது பழக்கம் இல்லை. மனுதாரர் தற்கொலைக்கு முயன்று விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். அது சம்மந்தமான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளரா என்று எனக்கு தெரியாது. மனுதாரர் விருதுநகர் அரசு மருத்துவமனையில் மட்டும் சிகிச்சை பெற்றார், வேறு எங்கும் சிகிச்சை பெறவில்லை. மனுதாரின் மகனுக்கு வலிப்பு நோய் வரும் என்றும், அதற்கு மனுதாரர் எந்த சிகிச்சையும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாருக்கு கல்லூரி படிக்கும் செல்வி என்ற ஒரு

சகோதரியும், ஒரு சகோதரரும் உள்ளனர். சகோதரர் பெயர் என்ன என்று கேட்டால் சாட்சி தற்பொழுது இல்லை என்று கூறுகிறார். மனுதாரர் 12 ம் வகுப்பு படித்துள்ளார். மனுதாருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரின் மகன் உடல்நிலை மோசமாகி மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் மனுதாரர் தான் குடித்து விட்டு வந்து எதிர்மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்துவார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது வரை மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றால் இல்லை. நான் மனுதாரர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வரை எதிர்மனுதாரர் தனியாக தான் குழநதையை வைத்து பராமரித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. குழந்தைக்கான மருத்துவ செலவுகள் அனைத்தையும் எதிர்மனுதாரர் தான் பார்த்துவருகிறார் என்றும், மனுதாரர் எந்த உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.